1986 மே 6]

Modern Medicine டாக்டர்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த ஊதியத்திற்கு சரிசமமாக பரிந்துரை செய்யப்பட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசினர் ஓமியோபதி கல்லூரியில் பணிபுரிகிற பேராசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை? விரிவுரையாளர்களின் எண்ணிக்கை எத்தனை? அங்கே விரிவுரையாளர்கள் போதவில்லையென்ற குறைபாடு மாணவர்கள் மத்தியில் இருக்கிறதா? அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை விவரம் என்னிடம் இல்லையென்றாலும், அங்கே இருக்கிற பேராசிரியர்கள் போதுமென்ற குறிப்புதான் வந்திருக்கிறது. இருந்தாலும் அங்கேயிருக்கிற படுக்கைகள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற அந்த முயற்சியில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதுதான் இப்போது நமக்கு மிகத் தேவையான ஒன்றாகும்.

வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கொள்முதல்.

679—(*வினா எண் 5246) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) 1984—85-ம் ஆண்டில் மக்களுக்கு வினியோகிக்க வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப் பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) சுமார் 35 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கு பருப்பு வகைகள் வெளி மாநிலத்திலிருந்து டெண்டர் மூலம் வாங்கப்பட்டு இருக்கிறது.

[1986 மே 6

திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் இருந்து அரிசி மற்றும் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்வதால் அதிகப்படியான செலவு எவ்வளவு ஏற்பட்டது? இதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு ஏதாவது மானியம் கோரியிருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரிசியை மனதிலே வைத்துக் கொண்டு இந்தக் கேள்வியை கேட்டிருப்பார் என்று கருதுகிறேன். அரிசி 1984-லே வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்படவில்லை. பருப்பு வகைகள்தான் வாங்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு மத்திய அரசு மானியம் எதுவும் வழங்கவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் வாங்கி, மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுக் கூடங்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டு வெளிமாநிலங்களில் இருந்து அரிசி கொள்முதல் செய்த பின்பும், மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசிற்கு அரிசி கிடைத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங் களில் தலா 90 ஆயிரம் டன் அரிசி மத்திய தொகுப்பிலிருந்து நமக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரியில் 65 ஆயிரம் டன் அரிசி மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டு இருக்கிறது. மார்ச், எப்ரல் மாதங்களில் சுமார் 40 ஆயிரம் டன் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டு இருக்கிறது. மத்திய தொகுப்பிலிருந்து சுமார் 1 லட்சம் டன் அரிசியை தொடர்ந்து வருகிற 3 மாதங்களுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு கடிதம் எழுதி வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே. அடுத்த கேள்வியும் இதுபற்றி வருகிறது. எனவே அதையும் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.